BRAMPTON Flower City brampton.ca

media release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கான மாமன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களை, முன்கூட்டியே செயல்படுத்துவதற்கான ப்ராம்ப்ட்டன் மாநகரின் 2020 ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட வரைவு அறிக்கை

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 4, 2020) – ப்ராம்ப்ட்டன் மாநகரின் 2020 ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட வரைவு அறிக்கை இப்போது ஆன்லைனில் (online) கிடைக்கிறது. 2020 ஆண்டுக்கான இந்த உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையானது மாமன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயங்களை, அதாவது ப்ராம்ப்ட்டன் நகரை நன்கு கொண்டு செல்லும் ஒரு நகராக (Well-Run City), பசுமை நகராக (Green City), பாதுகாப்பும் ஆரோக்கியமும் கொண்ட நகராக (Healthy and Safe City), வாய்ப்புக்கள் நிறைந்த நகராக (City of Opportunities) மற்றும் வண்ணமயமான (Mosaic) ஒரு நகராக ஆக்குவதற்கான விஷயங்களுக்கு ஆதரவு தருகிறது. இந்த வரவு செலவு திட்டத்திற்கான விரிவான அளவிலான கூட்டு விவாதங்கள் பிப்ரவரி 18 ஆம் தேதி பகல் 1 மணியளவில் துவங்கி, பிப்ரவரி 26 ஆம் தேதி மாலை 7 மணியளவில் வரவு செலவுத் திட்டத்திற்கான இறுதி ஒப்புதல் கிடைப்பதுடன் முடியும்.

வரவு செலவுத் திட்டக் குழு கூட்டங்களுக்கான முக்கிய தேதிகள் கொண்ட முழு பட்டியலானது, வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள், மற்றும் வரவு செலவுத்திட்டத்திற்கான முழுமையான முன் மொழிவுகள் ஆகிய அனைத்தும் மாநகரின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன. 2020 ஆம் ஆண்டிற்கான இந்த உத்தேசிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் பற்றிய, மக்களின் பின்னூட்டக்கருத்துக்களை மாநகர நிர்வாகம் வரவேற்கிறது.

வரவுசெலவுத் திட்டக்குழுவிற்கு மாநகரின் முதல் கட்ட உத்தேச நிதி ஒதுக்கீட்டு உயர்வானது, 2019 ஆம் ஆண்டினைக் காட்டிலும் 1.2% அளவுக்கு, நிகர வரவு செலவில் அதிகரிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால், ப்ராம்ப்ட்டன் நகர சொத்து வரி விதிப்பில் 0.5% அதிகரிப்பு இருக்கும்; வேறு விதமாக சொல்வதென்றால் ஒவ்வொரு வீட்டிற்கும் சராசரியாக $27 அதிக வரி விதிப்பு இருக்கும்; இது நகரின் வரவு செலவு திட்டத்திற்கான நிதியை அதிகரிப்பதற்கே ஆகும்.

வரி செலுத்துவோர், தங்கள் சொத்து வரி பட்டியலில் 1.8 % அதிகரிப்பை காண்பார்கள்; அதாவது சராசரியாக வீட்டு வரி செலுத்தும் ஒவ்வொருவருக்கும் $91 அதிகரிப்பு இருக்கும். இது ப்ராம்ப்ட்டன் நகரின் 0.5% ஆகும்; ரீஜன் ஆஃப் பீல் (Region of Peel) மற்றும் பீல் மாவட்ட

பள்ளி வாரியம் (Peel District School Board) ஆகிய அனைத்துக்குமாக சேர்த்து மொத்தமாக விதிக்கப்படுகிறது.

வரவு செலவுத்திட்டம் மீதான பரவலான பரிசீலிப்பு விவாதங்களின்போது, கூடுதல் திறன்கள் மற்றும் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் பற்றியும் குழுவினர் பரிசீலனை செய்வார்கள்.

**2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் முக்கிய அம்சங்கள்**

- மூன்று ஆண்டுக் காலத்தில், 120 புதிய பேருந்துகளை வாங்குவதற்காக, $136 மில்லியன் ஒதுக்கீடு: இதில் 88 பேருந்துகள் வளர்ச்சிக்கான புதியவையாகும் மற்றும் 32 பேருந்துகள் காலாவதியாகவிருக்கும் பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிதாக சேர்க்கப்படுபவையாகும்
- பசுமை நகரமாக (Green City) இருக்க வைப்பதற்கான நமது கடப்பாட்டினை எடுத்துரைக்கும் வண்ணமாக, நமது மக்கள் பாதுகாப்புடன் போக்குவரத்து செய்வதற்காக, நகர சாலைகள் மற்றும் பாதைகளை புதுப்பிப்பதற்காக $41மில்லியன் நிதி ஒதுக்கீடு
- 3 ஆண்டுக் காலத்திற்குள் விளையாட்டுக் களங்கள், தடங்கள் மற்றும் உள்ளூர் பூங்காக்களில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்காக $9.8மில்லியன் ஒதுக்கீடு
- பாதுகாப்பான ஒரு நகரமாக இருப்பதை உறுதிசெய்யும் விதமாக, 3 ஆண்டுக் காலத்திற்குள் ஃபோட்டோ ராடார் எனப்படும் வேகம் கண்டறியும் கருவிகளைப் பொருத்துவதற்காக $650,000 நிதி ஒதுக்கீடு
- மின்சக்தியை சிக்கனமாக உபயோகிப்பதற்காக, 3 ஆண்டுக் காலத்திற்குள் எல் ஈ டி (LED) தெரு விளக்குகளைப் பொருத்த $9மில்லியன் ஒதுக்கீடு
- க்வீன் ஸ்ட்ரீட் ராப்பிட் ட்ரன்ஸிட் ப்ரிலிமினரி டிசைன் (Queen Street Rapid Transit Preliminary Design), அதாவது திட்ட வடிவாக்கத்திற்கான ஆவணங்கள், வரைபடங்கள், அளவுக்குறிப்பு ஆவணங்கள் ஆகியவற்றுக்காகக்காக 3 ஆண்டுக் காலத்திற்குள் $8 மில்லியன் ஒதுக்கீடு
- 3 ஆண்டுக் காலத்திற்குள் ஹுரோன்ட்டோரியோ பிரதான வீதி எல் ஆர் டி(Hurontario Main-Street LRT) க்காக $2.9மில்லியன் ஒதுக்கீடு; இது பிராந்தியத்திற்கிடையேயான சிறந்த போக்குவரத்து இணைப்பு ஏற்படுத்துவதற்காக
- சென்சுரி கார்டன்ஸ் (Century Gardens) மற்றும் சவுத் ஃப்லெச்சர்ஸ் ரிக்ரியேஷன் செண்ட்டர் (South Fletcher's Recreation Centres) களில் புதிய இரண்டு இளைஞர் மையங்கள் அமைக்க $2 மில்லியன் ஒதுக்கீடு

- 5 ஆண்டுக் காலத்திற்குள், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் (Downtown Brampton) இல் ரையர்ஸன் இன்னொவேஷன் ஜோன் (Ryerson Innovation Zone) அமைப்பதற்காக $5 மில்லியன் ஒதுக்கீடு
- 5 ஆண்டுக் காலத்திற்குள் தீயணைப்பு கருவிகள் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர தீயணைப்பு லாரிகளை தரம் உயர்த்தி, அவற்றின் மூலம் மிக விரைவாகச் சென்று நம்பகமான தீத்தடுப்பு மற்றும் மீட்புப்பணிகள் மேற்கொள்வதற்காக $9.8 மில்லியன் ஒதுக்கீடு

**உங்கள் குரலும் ஒலிக்கட்டும்**

இந்த முன்மொழியப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை பரீலனை செய்து பின் வரும் ஏதேனும் ஒரு வழியில் தங்கள் பின்னூட்டக்கருத்துக்களைக் கூற நகரவாசிகள், வணிகர்கள் மற்றும் வளர்ச்சியில்/வளர்ச்சியின் பலனில் பங்கேற்பவர்கள் ஆகியோர் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்:

- மின்னஞ்சல் அனுப்பலாம்: budget@brampton.ca எனும் மின்னஞ்சலில் ஒரு கேள்வி கேளுங்கள் அல்லது கருத்து கூறுங்கள் .
- தொலைபேசியில் அழையுங்கள்: எண் 311 ஐ அழைத்து உங்கள் கருத்தைக் கூறுங்கள் .
- ஒரு டெலிஃபோன் டவுன் ஹால் (Telephone Town Hall)-இல் இணையுங்கள் : பிப்ரவரி 18 ஆம் தேதி மாலை 7 மணி முதல் 8 மணி வரை ஒரு டெலிஃபோன் டவுன் ஹால் (Telephone Town Hall)-இல் பங்கேற்றிடுங்கள்; இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தொலைபேசி எண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அழைக்கப்படும். உங்கள் தொலைபேசி எண்ணை இந்த அழைப்பு பட்டியலில் சேர்க்க பிப்ரவரி 17 ஆம் தேதிக்குள் மாநகரின் வலைத்தளத்தில் பதிவு செய்துகொள்ளவும்.
- எவரேனும் ஒருவரை தூதுவராக அனுப்புதல்: வரவு செலவுத் திட்டக்குழுவில் அல்லது வரவு செலவுத் திட்ட ஒப்புதல் குழுவில் பங்கேற்று பேசுவதற்கு, தூதுவராக ஒருவரை அனுப்புவதற்கான வேண்டுகோளை சமர்ப்பிக்கவும். தூதுவராக அனுப்புவதற்கான வேண்டுகோள் படிவங்களை சிட்டி ஹால், 2, வெலிங்டன் வீதி மேற்கு ( City Hall, 2 Wellington Street West ) என்ற முகவரியில் இருக்கின்ற மாநகரின் அலுவலர் அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பூர்த்தி செய்யலாம்.
- ஒரு கூட்டத்திற்கு வருகை புரியவும்: சிட்டி ஹால் (City Hall) –இல் நடக்கின்ற வரவு செலவுத் திட்டக் குழு கூட்டங்களில் கலந்து கொண்டு , அந்த வரவு செலவுத் திட்டக் குழு கூட்ட முடிவில் அதன் ஒரு அங்கமாக நடைபெறும் கேள்வி நேரத்தில் அன்றைய நாள் கூட்டத்தில் நடந்த விவாதங்களின் பேரிலான கேள்விகளைக் கேளுங்கள்.

BRAMPTON Flower City brampton.ca

media release

**அறிஞர் கூற்றுக்கள்**

" ப்ராம்ப்ட்டன் நகருக்கான 2020 ஆம் ஆண்டின் உத்தேசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது, மன்றக்குழுவின் முன்னுரிமை பெற்ற விஷயங்களின் பேரில் வழிநடத்தப்படுகிறது; உயர்ந்த தரத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகளைக் கொடுப்பதில், வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை வளைத்துப் பிடித்தலில், தேசிய மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு வளைந்து கொடுத்தல் மற்றும் அதற்கு செவிசாய்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்த வரைவுத் திட்டமானது வரவு செலவுத் திட்டமாக ஆக மாறும்போது, செயல்பாட்டு ரீதியான திறன்கள் மற்றும் வருவாய் வளர்ச்சி ஆகியவை, சொத்து வரி அதிகரிப்பை ஒரு பொருட்டாக கருதாமல் இருக்கும் வகையில் புறம் தள்ளிவிடுகின்றன. இந்த மாநகரமானது திறந்த மனதும் வெளிப்படையுமான வரவு செலவுத் திட்ட விவாதங்களை நடத்த கடமை கொண்டிருப்பதுடன் மாநகரின் கட்டுமானச் செயல்முறையில் ப்ராம்ப்ட்டன் நகர வாசிகளின் கருத்துக்களையும் வரவேற்கின்றது."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி*

"உத்தெசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது, ப்ராம்ப்ட்டன் நகரில் அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் சமாளிக்கவும், நமது நகர வாசிகளும் தொழிலதிபர்களும் எதிர்பார்க்கிற மிகப்பிரம்மாதமான சேவைகளை வழங்கவும் கடமை கொண்டுள்ளனர்; இதனை மிகத்திறம்படவும் சிக்கனமாகவும் செய்ய முனைகின்றனர். தொடர்ந்து நடைபெற்றுவரும் உள்கட்டமைப்பு வசதி மற்றும் போக்குவரத்துக்கான முதலீடுகள் ஆகியவை நமது வளர்ந்து வரும் நகரின் மராமத்து, மற்றும் பழையவற்றுக்கு பதிலாக புதியதை மாற்றி வைத்தல் ஆகிய அவசியமான பணிகளுக்கும், எதிர்காலத்திற்கு வெண்டிய அளவிலான போக்குவரத்து வலைப்பின்னலை விரிவாக்குவதற்கும் உதவிகரமாக உள்ளன."

- *டேவிட் சட்டன், பொருளாளர்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம்,

தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca